**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. S.T.C. No. 499/2024**

**Deposition of Witness for Complainant PW3**

**திருமதி. கண்ணம்மா க/பெ. பரமேஷ் வயது. 39 ஊர். கண்ணேரிமுக்கு, கோத்தகிரி**

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of 15.05.2026 Witness Signature :**

**PW3 திரும்ப அழைக்கப்பட்டதன்பேரில் மீண்டும் குறுக்கு விசாரணை 01.23 P.M**

1. 12.07.2023ம் தேதி நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் எதிரி கோத்தகிரி உதவி ஆய்வாளருக்கு எழுதிக்கொடுத்த மனுவில் 'கடைக்கம்பட்டி ஊரில் வசிக்கும் ராணி என்பவரிடம் இன்று 12.07.2023 காவல் நிலையத்தில் வைத்து ரூ.40,000/– கொடுத்துள்ளேன். மீதி ரூ. 60,000/– ஐ 19.07.2023ம் தேதி கொடுத்துவிடுகிறேன்' என்று மனு எழுதிக்கொடுத்துள்ளார். அந்த மனுவில் ரூ.40,000/– பெற்றுக்கொண்டேன் என்று நான் எழுதிக் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். **அந்த மனு எ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி எனக்கும் புகார்தாரருக்கும் கொடுக்க வேண்டிய ரூ. 60,000/–ஐ திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. ஆனால் எதிரி மேற்படி ரூ.1,00,000/– கடனாக பெறும்போது கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரர் ராணி எதிரிக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி

வாங்கியவுடன் என்மீதும் புகார்தாரர்மீதும் கோத்தகிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. என்னையும் புகார்தாரரையும் கோத்தகிரி காவல் நிலையத்தில் விசாரிக்கும்போது, நாங்கள் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்கிறோம் என்று எழுதிக்கொடுத்துவிட்டு வந்துவிட்டோம் என்று சொன்னால் சரில்ல. எதிரிக்கும் புகார்தாரருக்கும் எந்த கொடுக்கல் வாங்கலும் இல்லை என்றாலும், எதிரி கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், புகார்தாரர் எனது சகோதரி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/- G. Amirdham, 15.05.2026
Judicial Magistrate,
Kotagiri